மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பை 10 ஆம் தேதிதான் அலுவலகத்திலே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு செய்தி வந்த, தெரிந்த 7 ஆம் தேதியே நடவடிக்கை எடுத்து, 7 ஆம் தேதியே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

மதுரையில் உயர் நீதிமன்றக் கிளையை தொடங்காதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரையில் உயர் நீதிமன்ற கிளையை தொடங்காததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனதிற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மதுரையில் உலகனேரி கிராமத்தில் உயர் நீதிமன்ற ஆயம் அமைக்க 1997-ல் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இங்கு தேவையான கட்டடங்கள் கட்ட அரசு ஆணை (நிலை) எண் 449, உள் (நீதிமன்றங்கள் 1அ) துறை நாள் 4-5-2000-ல் ரூ.58.45 கோடி மதிப்பீட்டிற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டது.

2. இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் (Tender) பொதுப் பணித் துறையால் 12-1-2001 ஆம் தேதி கேட்கப்பட்டு, 8-3-2001 ஆம் தேதி ஒப்பந்ததாரர்கள் முடிவு செய்யப்பட்டனர். 2000-2001-ல் இத்திட்டத்திற்கு ரூ.2 கோடி இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு 19-3-2001 முதல் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2001-2002 திட்ட மதிப்பீட்டில் இப்பணிக்காக ரூ. 12.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டமிட்டபடி இப்பணிகள் நிறைவேற்றப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2001 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரையில் உயர் நீதிமன்றத்தின் கிளை என்ற காரணத்தால் இதுகுறித்து பேரவையில் நம்முடைய உறுப்பினர் திரு. ஹக்கீம் பேசினார். உறுப்பினர் திரு. நன்மாறன் பேசினார். இதில் என்னுடைய உணர்வையும் இணைத்துக்கொள்கிறேன். எங்கள் சார்பாக நீங்கள் கேள்வி கேளுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதும் மதுரையிலே உயர் நீதிமன்றத்தின் கிளை கட்டப்படும் என்று அப்போதே அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்கடுத்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபோதும் அவர்களும் மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய கிளை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இரண்டு ஆட்சிகளையும் நாம் பார்த்துவிட்ட பின்னால், இப்போது 3-ஆவதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தும்கூட இன்னும் நம்முடைய கனவு நனவாகாமல், இன்னும் மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை அமைக்க முடியாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு செய்தியாகும். விவர அறிக்கையில் நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது உலகனேரி என்ற இடத்தில் ஏற்கெனவே இடம் கையகப்படுத்தப்பட்டு, அதற்காக ரூ.12.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். நீங்கள் பணத்தை ஒதுக்கி கட்டடத்தைக் கட்டினாலும்கூட, அந்தக் கட்டடத்தைக் கட்டிமுடிக்க இன்னும் ஓராண்டு, இரண்டாண்டு அல்லது 3 ஆண்டுகள்கூட பிடிக்கலாம். நான் பணிவோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதெல்லாம் ஏற்கெனவே மதுரையிலே விசாலமான நல்ல பெரிய இடத்தில் செஷன்ஸ் நீதிமன்றம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய செஷன்ஸ் நீதிமன்றத்திலேயே ஒரு கட்டடத்தை தனியாகப் பகுத்து நீங்கள் உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை கொண்டுபோய் வைக்கலாம். அங்கே இருக்கக்கூடிய இடத்தில், உயர் நீதிமன்ற நீதி அரசர்களுக்கு உடனடியாக நம்மால் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முடியும். இருக்கக்கூடிய இடத்திலேயே வீடுகளைக் கட்டிக் கொடுத்து அல்லது Guest House உருவாக்கிக்கொள்ளலாம். அப்படி உருவாக்குகின்ற பட்சத்தில், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்றத்தோடு பேச—நேற்றுதான் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பதவி ஏற்றிருக்கிறார்கள்—வேண்டும். இதற்கு முன்னாலே எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம் நீதி அரசர்கள் யாரும் மதுரைக்குப் போக தயாராக இல்லை என்பதாகும். நீதி அரசர்களின் அந்த நீதி அங்கே இருக்கக்கூடிய, மதுரைவாழ் மக்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய வகையில் தற்போது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றிருக்கின்றவருடன் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்

உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தி இப்போதைக்கு உயர்நீதிமன்றத்தின் கிளையை அங்கே இருக்கக்கூடிய செஷன்ஸ் நீதிமன்றத்திலேயே அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற செஷன்ஸ் நீதிமன்றத்திலே போதிய இடம் இல்லை. உயர் நீதிமன்ற கிளையை உருவாக்குகின்றபோது அதனுடைய தேவைகள், வசதிகள் எல்லாமே மிக அதிகமாக உள்ள காரணத்தால் இதுகுறித்து 10, 15 ஆண்டுகளுக்கு முன்னரே பரிசீலிக்கப்பட்டு உயர் நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அடிப்படையில்தான் ரூ56 கோடியே 45 இலட்சத்தில் ஒரு திட்ட மதிப்பீடு 2000 ஆண்டிலே தீர்மானிக்கப்பட்டு, அதற்கான அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டு, திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நிதி ஒதுக்குவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது மீண்டும் அதை நாங்கள் ஆய்வு செய்தோம். ஆய்ந்த அடிப்படையில் 56 கோடியே, 45 இலட்சம் ரூபாய் தேவையில்லை. 36 கோடியே, 86 இலட்சம் ரூபாய் மட்டுமே போதும் என்று ஒரு கருத்துருவை தற்போது சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் 12 கோடியே, 75 இலட்சம் ரூபாய் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டப் பணிகள் முடிவுற்றவுடனேயே உயர் நீதிமன்றக் கிளை அங்கு தொடங்கப்படலாம் என்ற ஒரு முடிவு உயர் நீதிமன்றத்தோடு கலந்து எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து பெரும் பிரச்சினை எதுவும் எழாது என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், அமைச்சரிடம் பிறகு கேட்டுக்கொள்ளலாம். உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டுக்கான